தொகுதி ௨
சித்திரம் ௧௩

# பொன்னிவளநாட்டின் வீர சரித்திரம்



# ஒரு சகாப்தம் முடிந்தது

www.ponnivala.com

© 2012 Ponnivala Publishing






மறுவர்ணனை
பிரெண்டா பெக். இ
கசாண்ரா கொர்நால்

தமிழாக்கம்
சிவசங்கர் நவரட்ணம்
சத்தியபாமா

சித்திரங்கள்
ரவிசந்திரன & குழு

வடிவமைப்பு
பிரியா கோவிந்தராஜன்
ஸ்டெப்பான் ஹானிஹன்

ஒப்பச்சர்
முலர்விழி ராஜ்


வெளியீட்டாளர்
பொன்னிவளா
பப்ளிகேசன்


© 2012
சாப்ட்சைன்ஸ்
அசோசியேசன் லிமிடட்.









தொகுதி - 2 சித்திரம்-13

# ஒரு சகாப்தம் முடிந்தது

பொன்னிவளநாட்டின் சகோதரர்கள் இருவரும் வீரமலைக்காட்டில் தங்கள் உயிர்களை மாய்த்துக் கொண்டதை தனது கனவின் மூலம் அறிந்து கொண்ட அவர்களது ஒரே தங்கையான தங்காள் வீரமலைக்காட்டிற்கு அண்ணன்களின் உடல்களைத் தேடி புறப்பட்டாள்.







அண்ணன்கள் எனக்கு தந்துவிட்டுச் சென்ற அடையாளங்கள் கெட்டுப் போனதிலிருந்தே, அவர்களுக்கு என்ன நேர்ந்திருக்கும் என்று தெரிகிறது. கொம்பனைக் கொன்று விட்டு அவர்கள் தங்களையே மாய்த்துக் கொண்டதை தான் முன்னமே நான் கனவில் கண்டேனே!
என்னதருமை அண்ணன்களே! எப்படி நான் உங்களைப் பார்க்காமல் இருப்பேன்? இப்பொழுதே நான் நீங்கள் இருக்குமிடத்திற்கு வருகிறேன்.


பணிப்பெண்களே! காராளவம்சத்தின் ஒளிவிளக்குகள் இரண்டும் அணைந்துவிட்டன!
என் பிரியத்துக்குரிய அண்ணன்கள் வீரமலையில் மாண்டு விட்டனர்.
அவர்கள் சிவனின் திருவடியை சேர்ந்திருப்பார்கள்.
சரி! நான் சீக்கிரம் சென்று இந்த விசயத்தை என் அண்ணிகளிடம் கூற வேண்டும். அவர்களுக்குத் தெரிந்தால் அதிகம் கவலைப்படுவார்கள்.


# ஒரு சகாப்தம் முடிந்தது





எதற்காக எங்களை அழைக்கிறாய்? உன் அண்ணன்கள் எங்களுக்காக இதுவரை எதுவுமே செய்ததில்லையே!
எங்களை திருமணம் மட்டும் தான் செய்தார்கள்!
அப்பொழுது அவர்களின் சுண்டுவிரல் கூட எங்கள் மேல் படவில்லை!
இன்றுவரை அவர்கள் ஒருமுறை கூட எங்களை வந்து பார்க்கவில்லை.




தங்காளுடன் செல்ல அவர்கள் மறுத்ததால், அவள் அங்கிருந்து புறப்பட்டாள்.


அரண்மனைக்குத் திரும்பிய தங்காள் சேவகர்களை அழைத்து, அங்கிருந்த விலைமதிப்பு மிக்க பொருட்களை எடுத்துச் செல்லுமாறு உத்தரவிட்டாள்.
சேவகர்களே! பணிப்பெண்களே! உங்களுக்கு தேவையான பொருட்களை எடுத்துச் செல்லுங்கள்.
அரண்மனையில் இருந்த பொருட்களை அவர்கள் எடுத்துச் சென்றனர்.

# ஒரு சகாப்தம் முடிந்தது






தங்காள் அண்ணிகள் இருக்கும் இடத்திற்குச் சென்று, சிவனை வேண்டி மீண்டும் அக்கினிப்பந்தை வரவழைத்தாள்.
அக்கினிப்பந்தை அண்ணிகள் இருக்கும் அரண்மனையை நோக்கி ஏவினாள்.
சடசடசட
அவர்களின் அரண்மனையும் முற்றாக எரிந்து, அங்கும் மழை பெழிந்ததினால் சாம்பல் மிஞ்சியது.
தங்காள் எரிந்த சாம்பலுக்குள் இருந்து அண்ணிகளின் எலும்புகளை பொறுக்கி எடுத்துக் கொண்டாள்.

# ஒரு சகாப்தம் முடிந்தது




தங்காள் நீண்டவழிப் பயணமாக அண்ணன்களை தேடிப் புறப்பட்டாள்.
அவளுடைய ஆடைகள் கிழிந்து, மிகவும் சோர்ந்து போனாள்.
அவளுக்கு எப்படி வீரமலைக்குப் போவது என்று தெரியவில்லை.
ஆனாலும், அண்ணன்களைக் கண்டுபிடிக்கும் வெறியில் சென்றாள்!


செல்லும் வழியில் ஒரு குழிவான பாறையைக் கண்ட தங்காள் அதில் குடிப்பதற்கு தண்ணீரை நிரப்பித் தரச் செல்லி விஷ்ணுவை வேண்டினாள்.
பரந்தாமா! என் தொண்டையை நனைத்துக் கொள்ள சிறிதளவு தண்ணீர் தந்தருளுங்கள்.
உஸ்ஸ்ஸ்
அப்பொழுது திடீரென ஒரு பெரியபாம்பு படமெடுத்த படி அங்கே வந்தது.
ஐயோ!
பயப்படாதே பெண்ணே! நானும் உன் தாய் பெற்று வந்த வரத்தால் பிறந்தவன். உனக்கு உதவி செய்யத் தான் வந்துள்ளேன்.
நான் உன்னை அருக்காண்டி இருக்கும் இடத்திற்கு அழைத்துச் செல்கிறேன். அவள் உன் அண்ணன்களை கண்டுபிடிக்க உதவி செய்வாள்.
தாகம் மிகுதியால் பாம்பு தண்ணீரை அருந்தியது.


இருவரும் புறப்பட்டனர். பாம்பு தங்காளை வெய்யிலிலும் மழையிலும் காத்துச் சென்றது.
பாம்பின் உதவியுடன் நீண்டதூரம் நடந்து சென்ற தங்காள், இறுதியில் அருக்காண்டி தவம் செய்து கொண்டிருந்த இடத்தை அடைந்தாள்.


அதேநேரம் விஷ்ணுவும், தங்காளுக்கு உதவ பூமிக்கு விரைந்து வந்தார்.
அருக்காண்டி! தங்காள் சிவனை வேண்டி வரம் பெற வேண்டும். அதனால்..
சிறிதுநேரம் உன் இடத்தை அவளுக்காக விட்டுக் கொடு.
தங்காள்! இந்த தூணின் மேல் ஏறு.
இப்பொழுது சிவனை நினைத்து பிரார்த்தனை செய்!
விஷ்ணு சிவன் இருக்குமிடம் சென்று...
வாருங்கள் மைத்துனரே! எதற்காக வந்துள்ளீர்கள்.
காராள சகோதரர்களின் தங்கையான தங்காள் அண்ணன்களைத் தேடி வந்திருக்கிறாள்.
தன் அண்ணன்களிடம் ஒருமுறை பேச வேண்டுமாம். அதனால், அவர்களின் உயிரை சிறிதுநேரத்திற்கு கொடுத்தருளுங்கள்.


சிவன் அதற்கு ஒத்துக்கொண்டதும், விஷ்ணு தங்காளுக்கு இருக்கும் இடத்திற்குச் சென்று..
தங்காள்! சிவன் உனக்கு வரமளிக்க இணங்கியுள்ளர்.
இப்போது நீ சிவபெருமானை மனதில் நினைத்துக் கொண்டு அவரது தங்கப்பிரம்பை அளிக்கும் படி கேள்!
தங்காளும் அவ்விதமே செய்து சிவனிடம் இருந்து தங்கப்பிரம்பை பெற்றுக் கொண்டாள்.
அருக்காண்டியே! எனக்கு உங்கள் உதவி தேவைப்படுகிறது.
பெண்ணே! நீ முதலில் வீரப்பூருக்குச் சென்று சில பானைகளை வாங்கி வா.


தங்காள் உடனடியாக புறப்பட்டு வீரப்பூரில் உள்ள குயவன் வீட்டிற்குச் சென்றாள்.
ஐயா! தயவு செய்து எனக்கு ஏழுபானைகள் தேவைப்படுகின்றன தந்துதவுங்கள்..
ஏய்! இங்கிருந்து போ!
ஆனால், ஐயா என்னிடம் கொடுப்பதற்கு எதுவுமே இல்லை, தயவு செய்து என் மீது இரக்கம் காட்டுங்கள்.
சரி! நான் தருகிறேன்! என் உழைப்பிற்கான கூலியை கொடுத்துவிட்டு வாங்கிக் கொள்.



தங்காள் மனவேதனையுடன் நேராக விநாயகர் கோவிலுக்குச் சென்று விஷ்ணுவை வேண்டினாள்.
வைகுந்த வாசனே! அடைமழை பொழிந்து வெள்ளம் பெருகி இரக்கமேயில்லாத அந்த வீரப்பூர் குயவனின் உழைப்பெல்லாம் அழியட்டும்!
தங்காள் விஷ்ணுவிடம் வேண்டிய படி பெருமழை பொழிந்து, குயவன் வீட்டில் இருந்த பானைகள் கரைந்து போனது.
ஐயோ! ஐயய்யோ! எல்லாம் நாசமாப் போச்சே!
சற்று முன் வந்த பெண் இட்ட சாபத்தினால் தான் இப்படி நடத்திருக்க வேண்டும்.
நான் அவளைத் தேடிச் சென்று மன்னிப்பு கேட்க வேண்டும்.
அம்மா தாயே! தயவு செய்து என்னை மன்னித்து...
இந்த மழையை நிறுத்திவிடு. நான் நீ கேட்ட ஏழுபானைகளையும் தருகிறேன்.
சரி! நான் இப்பொழுதே மழையை நிறுத்துகிறேன்.

# ஒரு சகாப்தம் முடிந்தது




அருக்காண்டி பானைகளில் தானியங்களை நிரப்பத் தொடங்கினான்.
நன்றி அருக்காண்டி!



தானியங்கள் நிரப்பி முடிந்ததும் அருக்காண்டி தங்கப்பறவையை அழைத்தாள்.
அழகிய தங்கப்பறவையே! இந்தப் பெண்ணின் அண்ணன்கள் கொம்பனை கூறுபோட்டு வைத்திருக்கும் இடத்தில் இருக்கிறார்கள்.
இவளை அங்கே அழைத்துச் செல்.
தங்காள் பறவையின் மேல் அமர்ந்து பறந்து சென்றாள்.


தங்கப்பறவை தங்காளைச் சுமந்தபடி வெகுதூரம் பறந்து சென்றது.
காடு மலைகளைத் தாண்டியும் பறந்து சென்றது.



இறுதியாக தங்கப்பறவை தங்காளை பன்றியை கூறுபோட்டு வைத்திருக்கும் இடத்தில் இறக்கிவிட்டது.
பெண்ணே! இது தான் கொம்பனைக் கொன்ற இடம்.
அதோ அங்கே உங்கள் பொன்னாச்சி இருக்கிறாள். அவளுக்குத் தெரியும் உங்கள் அண்ணன்களின் உடல்கள் எங்கே இருக்கிறதென்று.
நான் அருக்காண்டியிடம் திரும்பிச் செல்கிறேன்.



தங்காள் பொன்னாச்சியிடம் வந்தாள்.
நீ தான் என் அண்ணன்களின் சாவுக்கு காரணம்.
பொன்னாச்சி! என் அண்ணன்கள் எங்கே?
உங்கள் அண்ணனகள் தான் என்னை இங்கே காவலுக்கு வைத்துவிட்டுச் சென்றனர்.
பின் எப்படி நான் இந்த இடத்தை விட்டுப் போக முடியும்?
சரி பொன்னாச்சி!
நான் இதைப் பார்த்துக் கொள்கிறேன்!


சடசடசட
சடசடசட
தங்காள் தங்கக்கோலினால் அங்கிருந்த பன்றிக்கறிகளை எரித்தாள்.
பொன்னாச்சி! என் அண்ணன்களின் உடல்கள் எங்கே இருக்கிறது?
பொன்னாச்சி தங்காளை ஆற்றைக் கடந்து கூட்டிச் சென்றது.



அங்கே ஒரு பெரியபாறையை கடந்தவுடன் இருசகோதரர்களின் உடலுடன் சாம்புகனின் உடலும் அங்கே இருந்தது.
தங்காள் அண்ணன்களின் உடலைப் பார்த்தவுடன் மனம் உடைந்து கண்ணீா மல்க நின்றாள்.
ஓ... சிறப்பிற்குரிய சின்னண்ணா!
ஆ... பெருமையான பெரியண்ணா!
நான் உங்களைப் பிரிந்து மிகவும் வருந்துகிறேன். சிவனிடம் சென்று வரம் வாங்கி உங்களுக்கு உயிர் கொடுக்க வந்துள்ளேன்.



தங்காள் அண்ணன்களை உயிர் பெறச் செய்வதற்கு,
பானையில் இருந்த தண்ணீரை அவர்கள் மீது தெளித்தாள்.
பின் சிவனுடைய தங்கக்கோலை கையில் எடுத்து விஷ்ணுவை
வேண்டினாள். அப்பொழுது அனைவரும் உயிர் பெற்று எழுந்தனர்.



என் அன்பான தங்கையே எங்களை எப்படிக் கண்டு பிடித்தாய்?
ஆபத்துகள் நிறைந்த இந்த அடர்ந்தக் காட்டிற்குள் எப்படி வந்தாய்?
எனக்கு ஒரு நாகபாம்பும், அருக்காண்டியும் உதவினார்கள். அருக்காண்டியின் தங்கப்பறவை என்னை இங்கு கொண்டு வந்து சேர்த்தது. பின் சிவனிடம் வரம் வாங்கிப் பெற்ற தங்கக்கோலைக் கொண்டு உங்களுக்கு உயிர் கொடுத்தேன்.
இப்பொழுது உங்களை உயிருடன் பார்த்து விட்டேன். வாருங்கள் நம் நாட்டிற்கு திரும்பிச் செல்லலாம்.
தங்காள் எப்பொழுது விஷ்ணு என் பூநூலை அறுத்தாரோ அப்பொழுதே பூமியில் என் ஆயுட்காலம் முடிந்துவிட்டது என்று தெரிந்து கொண்டேன்.
மறுபடியும் எங்களால் மீண்டும் ஆட்சி செய்ய முடியாது. இனி மற்றவர்கள் ஆளட்டும்.
இந்த வீரமலைக் காட்டிலேயே எங்களுடைய இறுதிச்சடங்கை நடத்திவிடு.



தங்காள் இறுதிச்சடங்கை நடத்தும் பொருட்டு சொர்க்கத்தில் இருந்து தேவர்களை அழைத்தாள்.
எமதர்மன் அங்து வந்து மூவருடைய உயிரையும் எடுத்துக் கொண்டார். பின்னர் தேவர்கள் அவர்களது உடலை தூக்கிச் சென்றனர்.


அவர்களின் உடல்கள் தங்காளின் வழிநடத்தலில் பலமலைகளையும் காடுகளையும் கடந்து எடுத்துச் செல்லப்பட்டது. முடிவில் அவர்கள் வீரமலையை அடைந்து உடல்களைக் கீழே வைத்தனர்.
விஷ்ணு! என் அண்ணன்களின் இறுதிச்சடங்கை நிறைவேற்ற எனக்கு உதவி புரியுங்கள்!


விஷ்ணு ஒரு அழகிய பல்லாக்கை அனுப்பினார். அதில் அவர்களின் உடல்களை கிடத்தி பல ஊர்களுக்கும் எடுத்துச் சென்றனர்.
பல்லாக்கு திரும்பியதும் தங்காள் விஷ்ணுவை மறுபடியும் வேண்ட முதலில் சாம்புகனையும், பின் பொன்னாச்சியையும் சிலையாக மாறினார்.


ங்ஈஈஈஈஈ!
அடுத்து அங்கே வந்த அவர்களின் குதிரைகளும் சிலையாக மாறின.
இறுதியாக, பென்னிவளநாட்டை ஆண்ட இரு சகோதரர்களும் சிலையாக மாறினர். தங்காள் அவர்களுக்கு பூஜை செய்தாள்.


சிவனும், பார்வதியும் இதைப் பார்த்துக் கொண்டு இருந்தனர்.
தங்காளின் கடமைகள் முடிந்து விட்டன. இனி நாம் அவளை தெய்வசபைக்கு அழைத்துக் கொள்ள வேண்டும்.
அவளை அழைத்து வர பல்லாக்கை அனுப்புங்கள்.
சிவன் மலர்களால் அலங்கரிக்கப்பட்ட பூப்பல்லக்கை, தங்காளை அழைத்து வர பூமிக்கு அனுப்பி வைத்தார்.
தெய்வசபை வந்த தங்காள் இருவரிடமும் ஆசி பெற்றாள். அதேநேரம் பூமியில் வாழ்ந்து வந்த தெய்வசபைக்கிளிகளும் திரும்பி அங்கே வந்து சேர்ந்தன.
கீ! கீ!


பொன்னிவளநாட்டில் வாழ்ந்த காராளக் கவுண்டர்களின் கதை இத்துடன் நிறைவடைகிறது.
பூமி பாலகராகிய குன்னுடையாக் கவுண்டரின் கதையைப் படித்தவரும், படிக்க வைத்தவரும், காதால் கேட்டவரும்
எக்காலமும் அவர்கள் இருந்து பட்டம் ஆள வேண்டும். ஆல் போல் தழைத்து, அருகு போல் வேரூன்றி!
என்றும் கனகசபை, எப்போதும் தெய்வசபை போல் இருந்து வற்றாத சிற்றாறு, வடியாத பாலாறு போல...
மூங்கில் போல் வளர்ந்து, சுற்றமும், நட்பும் பாராட்ட வாழியவே!! சுபமங்களம்!!!
சுபம்.

# பொன்னிவளாவை பற்றி ஒரு சிறு தொகுப்பு

பொன்னிவளா ஒரு புரதான பண்டை கால கதை. இக்கதை கிராமத்து உடுக்கை பாடகர்களால் இன்றும் ஆடலும், பாடலுமாக சொல்லப்படும் ஒரு பழங்கதையாகும்.

1965 வருடம் கொங்கு நாட்டில் உள்ள மின்வசதி இல்லாத சிறு கிராமத்தில், ஒலி நாடாவை கொண்டு, 18 இரவுகளில் ஒலி பதிவு செய்யப்பட்ட கதையாகும். முதன் முறையாக, கம்யூட்டர் 2D அனிமேஷனில் 26 தொலைக்காட்சி தொடர்களாக ஊருவாக்கப்பட்டு, பல மொழிகளில் பதிவு செய்யப்பட்டது.

ராஜாங்கம் என்பது அதன் மக்களால்தான் கட்டமைக்கப்படுகிறது. உதாரணமாக குடையுன் பரந்து விரிந்த மேல்பகுதி ராஜாங்கம் என்றால், மக்கள்தான் அதனை தாங்கி நிற்கும் கம்பிகள்.

எனவே ஒரு ராஜாங்கத்தைப்பற்றி சொல்லவேண்டும் என்றால், அந்த ராஜாங்கத்தின் மக்களை பற்றியும் சொல்லவேண்டும். அப்போதுதான் அந்த ராஜாங்கத்தைப்பற்றி முழுமையாக புரிந்து கொள்ள முடியும். இக்கதை கொங்கு மக்களின் கதை. இக்கதை தோராயமாக ஆறாம் நூற்றாண்டில் கொங்கு மக்களின் வாழ்க்கை முறையையும், அவர்களின் சமுதாய மற்றும் நாகரீக வாழ்க்கையையும் சித்தரிக்கிறது.



மேலும் பொன்னிவளாவைப்பற்றி விபரம் அறிய பொன்னிவள இணைய தளத்திற்கு செல்லுகள்
www.ponnivala.com/comic26tamil




வாருங்கள்!

# பொன்னிவள

அங்காடிக்கு

சித்திரக்கதை - HD அனிமேஷன் - விளையாட்டு - வாணிக பொருட்கள் - கேளிக்கை - மேலும் பல இலவசங்கள்!







01. காராளர் தோற்றம்
02. அநாதைச்சிறுவன்
03. நாடு கடத்தல்
04. உரிமையுள்ள காதலி
05. அதிசய கல்யாணம்
06. வருத்த விதை
07. ஆயிரம் யாசகர்கள்
08. கொடிய சாபம்
09. உத்தமியின் கோபம்
10. விரக்தியுன் பலன்
11. சாப நிவர்த்தி
12. சொர்க வாசல்
13. விதியின் கணக்கு
14. கோவில் ரகசியம்
15. உண்மை தெரிந்தது
16. நாடு திரும்புதல்
17. மானம் பெரிதென்று
18. சினம் கொண்ட சின்னவர்
19. சுதந்திரம் வென்றது
20. ஆசீர்வதிக்கப்பட்ட வாள்
21. சாம்புகனின் தந்திரம்
22. புதிய சவால்
23. நேருக்கு நேர்
24. எதிரியின் சவால்
25. பெரும் தியாகம்
26. ஒரு சகாப்தம் முடிந்தது

26யும் பெற்றுகொள்ள!

ISBN 978-1-927093-67-2
90000 >
9 781927 093672

www.ponnivalamarket.com
மேலும் விபரங்களுக்கு இணைய தளத்திற்கு செல்க:
www.ponnivala.com

© 2012 Ponnivala Publishing